**O.S. No. 199 /2020**

**Date:20.02 .2026**

**வா.சா. 1 திருஞானஸ்கந்தர்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகளின் அப்பா , அம்மா பெயர் தெரியுமா என்றால் அப்பா பெயர் சீனிவாச ராவு. சீனிவாசராவுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 பேர் அவர்கள் யார் என்று கேட்டால் பிரதிவாதி 1.ரமணன், 2. கிருஷ்ணன், 3.பத்மா . கிருஷ்ணன் தற்போது உயிருடன் இல்லை. பிரதிவாதி ரமணன் என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். 1.ரமணன், 2. கிருஷ்ணன், 3.பத்மா ஆகியோர்கள் திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படியோர்கள் சொத்துக்களைப்பொறுத்து பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் கூட்டாகதான் அனுபவம் செய்து வருகிறார்கள். நான் பொய்யாக கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எக்காலத்திலும் இந்த பிரதிவாதி அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணன் வாங்கிய கடனை இந்த பிரதிவாதி கட்ட வேண்டிய அவசியம் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கை பிரதிவாதியை கஷ்டம், நஷ்டம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் நடவடிக்கை எடுப்பதற்கு பிரதிவாதிக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது என்றால் சரிதான். பிரதிவாதி கடனை செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்பதால் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.